**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)**

**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

**வியாபார நிர்வாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பு முதலாம் வருட முதலாம் பருவ கருத்தரங்கு மற்றும் பரீட்சைகள் 2014 / 2015 (புதிய பாடத்திட்டம்)**

இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழக வியாபார நிர்வாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு (புதிய பாடத்திட்டம்) பதிவு செய்த தகுதிவாய்ந்த மாணவர்களுக்கான முதலாம் வருட முதலாம் பருவ (1st Year, 1st Semester) கருத்தரங்குகள் 08.09.2018 முதல் ஆரம்பமாகின்றன. இக்கருத்தரங்குகளில் 2014 / 2015 ஆம் கல்வியாண்டில் பதிவு செய்து தங்களது கற்கைநெறிகளை பூர்த்தி செய்யாத மாணவர்களும் கலந்துகொள்வதோடு அதன் பின்னர் நடைபெறவிருக்கின்ற இறுதிப் பரீட்சைகளிலும் கலந்துகொள்ளலாம்.

## 1. தகுதி

2014 / 2015 ஆண்டு கல்வியாண்டில் வெளிவாரி மாணவராகப் பதிவு செய்து எதுவித கருத்தரங்கு மற்றும் பரீட்சையில் கலந்து கொள்ளாதர்கள், ***அல்லது***

கருத்தரங்கில் கலந்து கொண்டு மதிப்பீட்டுப் பரீட்சையில் சித்தியடைந்து பரீட்சைக்குத் தோற்றாதவர்கள், ***அல்லது***

கருத்தரங்கில் கலந்து கொண்டு மதிப்பீட்டுப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள், ***அல்லது***

இறுதிப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள்

இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் 08.09.2018 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு பல்கலைக்கழகத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். இறுதிப்பரீட்சைக்கு மாத்திரம் தோற்றவிருக்கும் மாணவர்கள் தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 20.09.2018 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும்:

Assistant Registrar,
Centre for External Degrees & Professional Learning (CEDPL)
South Eastern University of Sri Lanka
Oluvil # 32360

## 2. விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல்

இலங்கை தென்கிழக்குப் பல்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.seu.ac.lk/cedpl/) அல்லது நேரடியாக பெற்றுக் கொள்ளலாம்.

## 3. கட்டண விபரம்

| **வெளிவாரிப் பட்டப்படிப்பு** | **முழுக் கட்டணம் *** | **கருத்தரங்கு** (ஒரு பாட அலகு) | **இறுதிப்பரீட்சை** (ஒரு பாட அலகு) |
|---|---|---|---|
| வியாபார நிர்வாகமாணி | 17,500.00 | 1,500.00 | 1,000.00 |

* முதலாம் வருட முதலாம் பருவ கற்கைநெறிக் கையேடு, கருத்தரங்கு, பரீட்சை போன்றவற்றுக்கான சகல கட்டணங்களும் இதில் அடங்குகின்றன.

4. **விண்ணப்பதாரிகளின் கவனத்திற்கு:**

- இக்கருத்தரங்கில் தொடர் மதிப்பீடு நடாத்தப்பட்டு (Continuos Assessment) ஒவ்வொரு பாடத்துக்குமான மொத்தப் புள்ளியில் 30 வீதமான புள்ளிகள் இத்தொடர் மதிப்பீட்டுக்கு வழங்கப்படும். இதில் 40 வீதமான அதாவது 12 புள்ளிகளைப் பெறுபவர்கள் மாத்திரமே இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். இறுதிப் பரீட்சைக்கு 70 புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தம் 100 புள்ளிகளுக்கான தரம் வழங்கப்படும்.
- பரீட்சைகள் யாவும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலேயே நடைபெறும்
- பூரணப்படுத்தப்படாத, மற்றும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: 067-2052801

**பணிப்பாளர்**
**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**